ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2089/57 - 2018 සැප්තැම්බර් මස 22 වැනි සෙනසුරාදා - 2018.09.22

2089/57 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இலக்கம்: DS/GFG/L&L/5/ 95.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இலக்கம்: 4-3 /11 /2016/UD/71.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தின் காலி நான்கு கடவைகள் பிரதேசச் செயலகப் பிரிவின் காலி மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட 96B கல்வடு கொடை, 96H மினுவன்கொடை போன்ற கிராம அலுவலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட கல்வடுகொடை மற்றும் மினுவன்கொடை போன்ற கிராமங்களில் அமையப் பெற்றுள்ள நில அளவையாளர் நாயகத்தின் அடிப்படை காணித் துண்டின் இலக்கம் 4373 ஐக் கொண்ட அடிப்படை காணித் துண்டின், காணித் துண்டு 1,2,3,4,5,6 எனக் காட்டப்பட்டு உள்ள 0.0068 ஹெக்டயார் அளவு விஸ்தீரணங்கொண்ட கீழே குறிப்பிடப்படுகின்ற பெயர்கள் மற்றும் அளவுகளுடன் கூடிய காணித் துண்டுகள்.

**காணித் துண்டு இலக்கம் 1**

காணியின் பெயர்: தேடிக் கொள்ள முடியவில்லை; உரிமை கோருபவர்: அரசு; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர்: லக்ஷ்மன் ஆனந்த என்பவர்; விஸ்தீரணம்: 0.0002 ஹெக்டயார்.

**காணித் துண்டு இலக்கம் 2**

காணியின் பெயர்: தூவே வத்தை; உரிமை கோருபவர்: அரசு; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர்: ஸ்டெலா நாகஹவத்தை என்பவர்; விஸ்தீரணம்: 0.0002 ஹெக்டயார்.

**காணித் துண்டு இலக்கம் 3**

காணியின் பெயர்: அழுத் அஸ்வெத்தும; உரிமை கோருபவர்: அரசு; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர்: அசோக்க குணசேர என்பவர்; விஸ்தீரணம்: 0.0007 ஹெக்டயார்.

**காணித் துண்டு இலக்கம் 4**

காணியின் பெயர்: தூவேவத்த, தல்கஹவத்த என்கின்ற லன்சியாவத்த; உரிமை கோருபவர்: அரசு; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர்: கே.ஏ. பிரியங்கர என்பவர்; விஸ்தீரணம்: 0.0003 ஹெக்டயார்.

**காணித் துண்டு இலக்கம் 5**

காணியின் பெயர்: தேடிக் கொள்ள முடிய வில்லை; உரிமை கோருபவர்: அரசு; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர்: ரீ.பீ. சேபாலி தம்மிகா என்பவர்; விஸ்தீரணம்: 0.0048 ஹெக்டயார்.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**காணித் துண்டு இலக்கம் 6**

காணியின் பெயர்: தேடிக் கொள்ள முடிய வில்லை; உரிமை கோருபவர்: அரசு; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர்: தேடிக் கொள்ள முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0006 ஹெக்ட யார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஐ.ஹிமாலி ரத்னவீர,
பிரதேச செயலாளர் (ப.க),
நான்கு கடவைகள் - காலி.

10 - 168

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.